[1996 ஆகஸ்ட் 7

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. அ.வ. அப்துல் நாசர்.

திரு. அ.வ. அப்துல் நாசர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிதம்பரத்தில் பாதாளச் சாக்கடையிலிருந்து வெளியாகும் கழிவுநீர் கான்சாகிப் கால்வாயில் கலப்பதால், அங்கே இருக்கும் நீர் கால்நடைகள் குடிப்பதற்கு லாயக்கற்றதாகவும், பாசனத்திற்குப் பயன்படுத்தக்கூடியதாக இல்லாமலும் இருக்கிறது. அந்தத் தண்ணீர் குளங்கள், குட்டைகள் போன்றவற்றுக்குச் செல்லுகின்ற போது அந்தப் பகுதி மக்களுக்கு சுகாதாரக் குறைவு ஏற்படுகிறது. எனவே கழிவுநீர், வாய்க்காலில் கலக்காமல் தடுப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படுமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலக்கேள்வி கடலூர் நகராட்சி பற்றியதாகும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 112, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. கே. லட்சுமணன், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

112—

கொசு மருந்து அடிக்கும் பணியாளர்கள் நியமனம்

** 849*—**திரு. வி.கே. லட்சுமணன்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோயம்புத்தூர் மாநகராட்சிக்குக் கூடுதலாகக் கொசு மருந்து அடிக்கும் பணியாளர்களை நியமிக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

திரு. வி.கே. லட்சுமணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேர்தல் சமயத்தில் நாங்கள் மக்களிடம் வாக்குக் கேட்கச் சென்றபோது, மக்கள் கொசுத் தொல்லையைப் பற்றி மிகவும் குறைபட்டுச் சொன்னார்கள். கோவையிலே இரண்டாவது பாதாளச் சாக்கடைத் திட்டம் நிறைவேற்றப்படுவதிலே மிகுந்த காலதாமதம் ஏற்படுவதாலும்,

1996 ஆகஸ்ட் 7]

பணியாளர்களை நியமிக்கும் அதிகாரம் மாநகராட்சிக்கு இல்லாததாலும், கொசுத் தொல்லையால் வாடுகின்ற மக்களுக்கு நிவாரணம் வழங்குகின்ற முறையிலே அங்கே உடனடியாகக் கூடுதல் பணியாளர்களை நியமிக்க வேண்டுமென்று மாநகராட்சிக்கு அரசு உத்தரவிடுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கோ.சி. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோயம்புத்தூர் மாநகராட்சிக்குக் கூடுதலாகக் கொசு மருந்து அடிக்கும் பணியாளர்களை நியமிக்கும் செயற்குறிப்பு இல்லை என்று சொன்னேன். ஏற்கெனவே நகராட்சியிடம் பொறுப்பு இருந்தபோது கொசு மருந்து தெளிக்கும் பணிக்கென 72 பணியாளர்கள் நியமனம் செய்யப்பட்டு அவர்கள் பணியிலே உள்ளனர். 1981 ஆம் ஆண்டு முதல், மாநகராட்சியோடு இணைக்கப்பட்டப் பகுதிகளுக்கு 40 பணியிடங்களை உருவாக்கி, பணியாளர்களை நியமனம் செய்து கொள்ள அரசின் அனுமதி கோரும் பிரேரணை, துறையின் ஆணையரால் பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது. அரசுக்கு செயற்குறிப்பு வந்தவுடன், அரசு அதைப் பரிசீலித்து ஆவன செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கே. சுப்பராயன்.

திரு. கே. சுப்பராயன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொசுக்கள் தோன்றுவதற்குக் காரணம் பொதுச் சுகாதாரம் முறையாக பராமரிக்கப்படாததுதான். பொதுச் சுகாதாரம் பராமரிக்கப்பட வேண்டுமானால், உள்ளாட்சிகளில் போதுமான பணியாளர்கள் நியமிக்கப்படவேண்டும். மாநில அரசில் உள்ளாட்சிகளுக்குப் போதுமான பணியாளர்களை நியமிப்பது சம்பந்தமாக, ஒப்புக்கொள்ளப்பட்ட நார்ம்ஸ் ஏதாவது இருக்கிறதா? அப்படி அந்த 'நார்ம்ஸ்'-ஐ அரசு ஏன் பின்பற்றவில்லை என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9-55

மாண்புமிகு திரு. கோ.சி. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். காரணம், நான் ஒன்றைச் சொல்லவிட்டுவிட்டேன். அதை அவர் நினைவுபடுத்தியிருக்கிறார். கடந்த கால ஆட்சியில் நடைபெற்ற சில தற்காலிகப் பணியாளர்கள் நியமனத்தைப் பற்றி இங்கே இருக்கிற அனைவரும் அறிவீர்கள்.

[1996 ஆகஸ்ட் 7

வேலைக்கு ஆளா, அல்லது ஆளுக்கு வேலையா அல்லது வேறு எதற்காகவாவது ஆளா, இப்படிப்பட்ட பிரச்சினை தோன்றி, மிகவும் கேவலமான முறையில் தற்காலிகப் பணியாளர் நியமனம் இந்தத் துறையில் அதிகமாக ஏற்பட்டிருக்கிறது. இருந்தாலும், அந்தப் பணியாளர் நியமனத்தில் தேவைகளைப் பூர்த்தி செய்கிற அளவிற்காவது பணியாளர்களை நியமித்து இருக்கிறார்களா என்றால், எந்தப் பணிக்கு யாரை நியமிப்பது, என்ன தகுதி என்பதையெல்லாம் பாராமல் அவர்கள் விருப்பு வெறுப்புக்கு ஏற்ப ஆட்களை நியமித்து விட்டார்கள். அதற்கு முன்னாலேயே ஒரு தடை ஆணையும் இருந்திருக்கிறது. அந்தத் தடை ஆணை ரத்து செய்யப்படவும் இல்லை. நிறைய இப்படி பணியில் நியமித்திருக்கிறார்கள். இருந்தாலும், இந்த அரசில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கலந்துகொண்டு முக்கியமானப் பணிகளுக்கு ஆட்கள் தேவைப்படுவதைப் பரிசீலித்து அதற்கு இருக்கிற தடை ஆணையை இரத்து செய்துவிட்டு, முறையாக வேலைவாய்ப்பு அலுவலகத்திலிருந்து பணியாளர்களை நியமிக்கின்ற பணியை இந்த அரசு துவக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கே. சுந்தர்.

திரு. கே. சுந்தர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொசுத் தொல்லையை ஒழிப்பதற்காக தற்போது இந்த அரசானது பண்டைக் காலத்திலே பயன்படுத்தி வந்த முறையைப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறது. அதாவது, சட்டமன்ற உறுப்பினர்கள் விடுதியில் கூட தினமும் வந்து புகை அடிக்கிறார்கள். ஒரே புகை மண்டலமாக இருக்கிறது. இப்போது விஞ்ஞான யுகத்தில், அணுயுகத்தில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வியைக் கேளுங்கள்.

திரு. கே. சுந்தர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனவே விஞ்ஞானத் தேவைக்கு ஏற்ப புதிய நடைமுறையில் கொசுக்களை ஒழிப்பதற்கு இந்த அரசு திட்டம் வைத்து இருக்கிறதா என்பதைக் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கோ.சி. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விஞ்ஞானத் தேவைக்கு ஏற்ப நகராட்சியில் திட்டம் எதுவும் இல்லை. ஆனால் கொசுக்களை ஒழிப்பதற்குத் தேவையான திட்டத்தைப் பரிசீலித்து நடவடிக்கைகளை எடுத்து இருக்கிறோம். புகை மூலம்தான் அந்த மருந்தை அடிக்க முடியும் என்றும், எவ்வளவு

1996 ஆகஸ்ட் 7]

இடங்கள், எவ்வளவு மக்கள் தொகை என்கிற அடிப்படையில் அந்தக் கருவிகள் எல்லாம் வழங்கப்படுகிறதே தவிர, விஞ்ஞானத்தைப் பற்றி இப்போது பேச நேரமில்லை. அதற்கான நிதி ஆதாரங்கள இப்போது நம்மிடத்தில் இல்லை. இப்போதே நாம் நடத்திக் கொண்டிருக்கிற முறைப்படி, தேவைக்கு ஏற்ப செய்ய முடியவில்லையே என்று இந்த அரசு வருந்துகிறது. அரசு அந்தத் தேவையைப் பூர்த்தி செய்ய முயலும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஜி. பழனிசாமி.

திரு. ஜி. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொசுக்களை ஒழிப்பதற்கு மத்திய அரசு, மாநில அரசுக்கு நிதி ஆதாரங்களை வழங்குகிறதா? அப்படி வழங்குகிற நிதியாக இருந்தால், முழுமையாக கிடைக்கிறதா, அது செலவழிக்கப்படுகிறதா, எவ்வளவு நிதி கிடைக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கோ.சி. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, . கொசுக்களை ஒழிப்பதற்கு எனத் தனியாக மத்திய அரசிலிருந்து எந்த நிதியும் ஒதுக்கப்படுவதில்லை. சுகாதாரம் மற்றும் ஊராட்சி நலனைக் கருதி இருக்கின்ற நிதியிலிருந்து நாம் அதை எடுத்துக் கொடுத்து உதவி செய்கிறோமே தவிர தனியாக ஒன்றும் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஆர். சொக்கர்.

திரு. ஆர். சொக்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெளிநாட்டிலிருந்து வரக்கூடிய விமானங்களில் எல்லாம் கூட இந்தியாவிற்குச் செல்லக்கூடிய பயணிகளுக்கு ஒரு கடுமையான எச்சரிக்கை சொல்லுகிறார்கள். இந்தியாவிலே, மலேரியா காய்ச்சல் இருக்கிறது, உரிய தடுப்பு நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ளுங்கள் என்று சொல்லுகிறார்கள். இது மிகப் பெரிய பிரச்சினை. முன்பு மத்திய அரசாங்கத்தில் என்.எம்.இ.பி. — `National Malaria Eradication Programme' என்று இருந்தது. செலவு அதிகம் ஆகிறது என்ற காரணத்தால் அதனை இடையிலேயே நிறுத்திவிட்டார்கள். மாநில அரசு மத்திய அரசுக்குக் கண்டிப்பாக ஒரு வேண்டுகோளைத் தெரிவித்து இந்தக் கொசுக்களைக் கட்டுப்படுத்த துரிதமான நடவடிக்கை எடுக்கவேண்டும். ஏன் என்றால், முன்பு மலேரியா காய்ச்சல் எங்காவது இருந்து தெரிவித்தால் ரூ. 10,000 பரிசு கொடுக்கப்படும் என்ற தகவலைச் சொன்ன காலம் மாறி முழுமையாக ஒழிக்கப்பட்ட மலேரியா காய்ச்சல் மறுபடியும் மிகக் கடுமையான மோசமான அளவிலே பரவி வருகிறது.

இது மிக மிக சுகாதாரத்தைப் பாதிக்கக்கூடிய ஒரு விஷயமாக இருப்பதால் அகில இந்திய அளவிலே தேவையான நிதி ஆதாரங்களை ஒதுக்கித் தர தக்க நடவடிக்கை எடுக்க இந்த அரசு மத்திய அரசுக்கு வேண்டுகோள் விடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கோ.சி. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ஆலோசனையை ஏற்று முதலமைச்சர் அவர்களைக் கலந்து மத்திய அரசுக்கு இப்படிப்பட்ட நிலையை எடுத்துக்கூறி ஆவன செய்ய முயற்சிக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 113, திரு. ஜி.கே. மணி, மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர்.

113—

சுபா புல் வளர்க்க விளம்பரம்

* *1343*—**திரு. ஜி.கே. மணி:**

மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதியில் கிராம மக்கள் சுபா புல் மரங்களை வளர்க்கப் போதுமான விளம்பரம் செய்யப்படவில்லை என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், நேரடியாக விவசாயிகளிடம் செயல்முறை விளக்கம் மூலம் விளம்பரப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. சோ. ஆறுமுகம், வேளாண்மைத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தருமபுரி மாவட்டத்தில் வேளாண் காடுகள் திட்டத்தின் மூலம், பல்வேறு மரம் வளர்ப்பு முறைகள் என்ற வகையில் சுபா புல் பற்றி தொழில்நுட்பக் கருத்தரங்கம், தொழில்நுட்பப் பயிற்சி மற்றும் விளம்பரப்பணி மூலமாக விவசாயிகள் அறிந்து பயன்பெற ஆவன செய்யப்பட்டுள்ளது.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.